அ.செ.வெ.எண்: 90 நாள்: 28.11.2010

# பத்திரிக்கைச் செய்தி

பொருளாதார, சமூக, கல்வி நிலைகளில் மிகவும் அடித்தளத்தில் வாழ்ந்து வரும் " புதிரை வண்ணார் " இனத்தைச் சார்ந்த மக்கள் மிகக் குறைவான எண்ணிக்கையில் இருந்தாலும் அவர்களின் நலத்திலும் அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தனியாக " தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் " அமைத்து ஆணையிட்டுள்ளார்கள்.

இவ்வாரியத்திற்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும் 12 அரசு அலுவலர்கள் அலுவல் சார்ந்த உறுப்பினர்களாகவும் சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட 13 அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டும் செயல்படும். மேலும், இவ்வாரியத்தின் மூலம் புதிரை வண்ணார் இன மக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் பின்வருமாறு.

- இச்சமுதாய மக்களின் கல்வி அறிவு பின்தங்கிய நிலையில் உள்ளதால் அனைத்து குழந்தைகளையும் பள்ளிகளில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- தங்குதடையின்றி கல்வி அறிவு பெற விடுதிகளில் எவ்வித பாகுபாடு இன்றி அனைவரையும் சேர்த்துக் கொள்ளுதல்.
- இலவச வீட்டுமனைப் பட்டா தொகுப்பு வீடு கட்டி தருதல்.
- பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கு பொருளாதார திட்டங்களை முழு மான்யத்துடன் வழங்குதல்.
- தாட்கோ மூலம் பொருளாதார முன்னேற்ற கடன் வழங்குதல்.
- சிறு கடன்கள் மற்றும் இலவச சலவைப் பெட்டி வழங்குதல்.

மேற்காணும் நலத்திட்டங்கள் செயல்படுத்துவது குறித்து விவாதிக்க முதற்கூட்டம் 28.01.2010 அன்று மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் கலந்து கொண்டு பல்வேறு கருத்துக்களை வழங்கினார்கள்.

மேலும், தாட்கோ மூலம் 2009–2010 ஆம் நிதியாண்டில் அரசு மருத்துவக் கல்லூரிகளில் 125 மகளிர்களுக்கு பட்டய செவிலியர் பயிற்சி கூடுதல் ஒதுக்கீட்டின் கீழ் ஒதுக்கீட்டு ஆணை மருத்துவக் கல்வி இயக்ககம் மூலம் வழங்கப்பட்டது. இதில், சென்னை மருத்துவக் கல்லூரி, கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைகளில் சேரவுள்ள 34 மாணவிகளுக்கு ஒதுக்கீட்டு ஆணை (Allotment Order) மாண்புமிகு தமிழக ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் அரசுச் முதன்மைச் செயலர் திரு. விஷ்வநாத் அ. ஷெகாவ்கர், இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு. சந்திரகாந்த் பி. காம்ப்ளே, இ.ஆ.ப., ஆணையர் ஆதிதிராவிடர் நலம் திரு. பொ. சிவசங்கரன், இ.ஆ.ப., இயக்குநர் பழங்குடியினர் நலம் திரு. உ. இரவீந்திரன், இ.வ.ப., மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9